# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, MADURAI

AROP14/2018

DEPOSITION OF 1 WITNESS FOR THE REESPONDENT

.....

| | | |
|---|---|---|
| Name | : | S.P. சிவக்குமார் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 6.9.2019.

மு.வி.

நான் தற்போது இராமநாதபுரம் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலகம், தேசீய நெடுஞ்சாலை, தனி வட்டாட்சியர், NH 49, அலகு 4-ல் பணிபுரிந்து வருகிறேன். நான் முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

கு.வி. மனுதாரர் தரப்பில்

என்னுடைய தாய் துறை அலுவலகம் வருவாய் துறை என்றால் சரி. என்னை, வருவாய் துறையில் இருந்து, மாவட்ட ஆட்சியர் நெடுஞ்சாலை துறைக்கு நியமனம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரி. என்னுடைய பணிகாலம் முழுவதும் இராமநாதபுரம் மாவட்டத்தில் தான் பணிசெய்து வருகிறேன் என்றுசொன்னால் சரி. எனக்கு ஆர்ஜித நிலங்கள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரி. கோப்புகளை பார்த்தால் தெரியும் என்றால் சரி. ஆர்ஜிதம் செய்த காலத்தில் மதுரையில் நான் மேற்படி பணியில் இல்லை என்றால் சரி. நில ஆர்ஜிதம் சம்பந்தமாக தற்போது சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன். வாக்குமூலம் கொடுப்பதற்கு எனக்கு தேசீய நெடுஞ்சாலை துறையில் இருந்து அதிகாரம் வழங்கியுள்ளார்கள் என்று சொன்னால் சரி. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள நிலங்களுக்கு எப்படி விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து ம.சா.ஆ.3 ல் பக்கம் 7 மற்றும் 8 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ல் சொல்லப்பட்டுள்ள விலை பட்டியல் பற்றி ம.சா.ஆ.3 ல் சொல்லப்படவில்லை என்றால் சரி. அவ்வாறு பிறப்பிப்பதற்கு முன்னரே,

விற்பனை பட்டியல் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. எ.ம.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின் அடிப்படையில் தான் அவார்டில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் அவார்டில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை எ.ம.சா.ஆ 1 ல் குறிப்பிடுவதில்லை. எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 இந்த வழக்கிற்காக தற்போது தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆர்ஜித நிலங்கள் அனைத்தும் நியாயமான இழப்பீட்டு உரிமை மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்துதல் புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்றச்சட்டம் 2013, பிரிவு 26(1)-ன்படி ஆர்ஜிதம் செய்தோம் என்று சொன்னால் சரி. 3(எ) அறிவிப்பு நாளிதழில் வெளியிட்ட 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்து நிலம் எடுக்கப்பட்ட கிராமத்தின் சார் பதிவாளர் அலுவலகத்தில் விற்பனை செய்யப்பட்ட விற்பனை புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதில் சேகரிக்கப்பட்டதில் கட்டிடம் விற்ற விற்பனை தொகையை தவிர்த்து எஞ்சிய விற்பனை இனங்களில் மொத்தமுள்ளதில், 50 சதவிகிதம் அதிகபட்ச விற்பனையினை எடுத்து, அதற்கான சராசரியை நிர்ணயம் செய்யப்படும். 3 ஆண்டு கால அடிப்படையில் தான் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தூரத்தின் அடிப்படையில் இல்லை என்று சொன்னால் சரி. தூரத்தின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால் அது தவறு. எ.ம.சா.ஆ.1 ல் தூரத்தின் அடிப்படையில் விற்பனை புள்ளி விவரங்கள் தகுதி இழப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. 1.6 கிலோமீட்டர் தூரத்தின் அடிப்படையில் ஆர்ஜிதம் செய்த நிலங்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் சரி. நான் 3G5 விசாரணைக்கு ஆஜராகவில்லை. அப்போது டி.ஆர்.ஓ. ஆஜராகியிருப்பார். ம.சா.ஆ.2 ல் கண்டுள்ளபடி 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை. எ.ம.சா.ஆ.1 முதல் 3 மாவட்ட ஆட்சி தலைவர் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்றும், தற்போது இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.3 ல் பக்கம் 8 ல் எந்தெந்த விற்பனை என்று விரிவான தீர்வாணை சொல்ல இயலாது. ம.சா.ஆ.3 ல் பக்கம் 8 ல் விற்பனை புள்ளி விவரங்கள் எண்ணிக்கையில் எந்தவகை நிலங்கள், நஞ்சை, புஞ்சை, அல்லது வீட்டடி மனைகளா என்பது குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரி. ஆர்ஜித நிலங்களில் உள்ள கட்டுமான கட்டிடங்களின் வயது, தன்மை ஆகியவற்றை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரி. ஆர்ஜித நிலங்களில் என்னென்ன மரங்கள் இருந்தது அதன் பலன்கள் மற்றும் பயன்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. கோப்பின் அடிப்படையில் தெரியும். ம.சா.ஆ. 2 ல் சராசரியை காட்டிலும் கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு உள்ளதால் அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. அந்த 3 ஆண்டுகாலத்திற்குள் அந்த கிரையம் ஆவணம் இருப்பின் அதனை கணக்கில் எடுத்துக்கொள்ளலாம். நான் மாவட்ட ஆட்சியர் விசாரணைக்கு உட்படவில்லை என்றும், என்னுடைய பணி காலம் முழுவதும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்தபடியால் மதுரையில் உள்ள இந்த வழக்கின் ஆர்ஜித விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம். சிவக்குமார். ஒப்பம்.எஎஎ, முதன்மை மாவட்ட நீதிபதி,மதுரை